உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம் சஞ்சிகை ௰௧] ௲௮௱௪௰௨ ௵ ஆனி. ௨, தேதி வியாழக்கிழமை, Thursday, June, 2, 1842 [Vol. II No 11

பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு

Historical sketch of the Pandian Kingdom

(Continued from page 109)

மிகுந்த சிவபக்தனுகிய சோழராசாவினுடைய குமாரத்தி வனிதாசுவனி என்கிறவளைக் கூனபாண்டியன் விவாகம்பண்ணினு.. அவள் தன் மதத்திலே பிரபலியப்படுத்தியாகிய ஞானசம்பந்தரை மதுரைக்கழைப்பித்தாள் அந்தச் சமயத்திலே கூன்பாண்டியனுக்குச் சுரங்கண்டு அதற்கு அவனுடைய சமணக்குருக்கள்மார், எண்ணெய்ஜபதங்கள் எண்ண மந்திரங்கள் பிரயோகம்பண்ணியும் அனுகூலமில்லாமற் போனதைப் பற்றி இவனுக்கும ஞானசம்பந்தருக்குஞ் சினேகஞ் சீக்கிரத்திலேபண்ணிவைக்கும்படிக்குச் சமயம் நேரிட்டது. ஞானசம்பந்தர் இவனுக்குச் சொஸ்தப்படுத்தினதிலேயே தன்னுடைய மதத்தின் பெருமையைப் பரிட்சை காட்டி வெற்றியடைகிறேனென்று மேற்போட்டுக்கொண்டார் இவருக்கு விரோதிகளானவர்கள் அந்தப் பவுருஷத்தை அங்கீகாரம்பண்ணினுர்கள், சைவ சம்பந்தமாயிருக்கிற வைத்திய பாண்டித்தியமானது தங்கள் எண்ணத்துக்கு அதிகப்பட்டுப் போகவே அவர்கள் தோற்றுப்போனுர்கள் அதின்பேரில ஞானசம்பந்தர் சொஸ்தப்படுத்தினது மந்திரபலத்தினுலேயென்று சொல்லி அவர்கள் இதரமான பரிட்சைகள் காட்டச் சொன்னுர்கள் அதற்கு ஞானசம்பந்தர் தடையில்லாமல் ஒத்துக்கொண்டார் அதன்பேரிலே இருதிறத்தாரும் ஏட்டிலே தங்கள் தங்களுடைய திருமந்திரங்களை எழுதி எவர்களுடைய ஏடானது நீரோட்டத்துக்கெதிரேறி மிதந்துபோகுதோ அவர்களுடைய மந்திரமானது கெலிச்சதாகக்கொள்ளவேண்டியதென்று வைகையாற்றிலேவிட்டார்கள். அப்பொழுது சைவமந்திரம் பேலிட்டுத் திருவேடகமென்கிற ஒரு ஸ்தலமட்டுமெதிரேறி அவ்விடத்திலே சிவனொரு விருத்தாப்பியவடிவங்கொண்டு அந்த ஏட்டைச் சலத்தினின்றெடுத்து மறுபடியும் ஞானசம்பந்தரிடத்திற் கொண்டுவந்து கொடுத்தார். இப்படி நடந்த காரியத்தை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கும்பொருட்டு மேற்படி ஏட்டைக்கொண்டுவந்து கொடுத்த அவ்விடத்திலே இராசாவானவன் ஒரு பட்டணமேற்படுத்தித் திருவேடகநாதருக்கென்றொரு கோவிலுங் கட்டிவைத்தான் அதின் பேரிற் சமணர்கள் (௮௲) பேர்வரைக்குந் தண்டிக்கப்பட்டுத் துரத்தப்பட்டும் போனுர்கள். கூன்பாண்டியன் தான் சைவனுகிறதற்குமுன்னே கூனன் என்று சொல்லப்படுகிற தன்னுடைய பேரின்படியே அங்கவீனனுயிருந்து சைவமந்திர உபதேசம் பெற்றுக்கொண்டவுடனே கூன் நிமிர்ந்து அதுமுதற் சுந்தரபாண்டியன் என்னும் பேரைப் பெற்றுன் அதுமுதல் ஞானசம்பந்தர் தான் மறுபடியும் உத்தரித்த மதத்துக்குப் பிரதான குருக்களாக ஸ்திரப்படுத்தப்பட்டார். மேலும் அவர் முக்கியமான ஒரு மடமேற்படுத்தினதாகவும், அது நாளதுவரையில் இருக்கிறதாகவுங் காண்கிறது அதுவுமன்றிச் சமபுத்திபத்தைச் சோந்த தெட்சணதிசையில சைவ மதஸ்தர்களாகிய பிரமசாரிகளிருக்கும்படியாகவும், அவர்களுக்குத் தலைமுறைதலைமுறையாக ஞானசிவாசாரியரென்கிற பேர்பெற்ற ஒரு தலைவனுமிருக்கும்படியாகவும், அநேக மடங்கள் கட்டியிருக்கிறதாகவுங் காணப்படுகிறது. இந்தத் திருமடாலயத்துக்கு முக்கியமாயும் ஆதியுமாயிருக்கிற ஸ்தானமானது, திருவாலவாயிலே ஏற்பட்டிருந்ததாகவும் அதுவுமிப்பொழுது அழிந்துபோனதாகவுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள் இந்தத் திருக்கூட்டத்துக்கு நாளதுவரையிலும் வரிசையாய (௱௰௮) போதலைவர்களானுர்களென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தத் திருக்கூட்டம் ஆதியிலே உண்டானதுமுதற்கொண்டு பத்துப் பதினொரு சதகங்களாயிருக்கவேண்டுமென்று நம்பவேண்டியது. மேலும் கிறிஸ்தாண்டின் ஏழாம் அல்லது ஒன்பதாஞ் சதகத்திலேதான் கூனபாண்டியனுடைய காலமென்று சொன்னதுஞ் சரிப்படுகின்றது.

அந்தப்பிரகாரம நவீனகாலங்களுக்குச் சமீபமென்கிறது சரித்திரத்துக்கினையிலே சேர்ந்ததாயிருக்கவில்லை. மிகவுஞ் சங்கிரமமாய்ச் சொல்லுகிறபோதுமான மட்டுந் தெளிவாய இருக்கிறது விபரித்துச் சொல்லுகிறதோ பூர்த்தியாயிருக்கவில்லை ஒன்பதாஞ் சதகத்திலும் பத்தாஞ் சதகத்திலுஞ் சோழராசாக்கள் பராக்கிரமத்திலே வெகுதூரமட்டுக்குந் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தித் தங்கள் தேசத்துக்கடுத்த பாண்டிய தேசத்தினுடைய அதிகாரத்தைச் செல்லவொட்டாமற் பண்ணினுர்கள் அவர்களுடைய அரசாட்சிக்குப் பின்பு மைசூர்தேசத்து வல்லாளராசாக்களானுர்கள்.

அந்த வல்லாளர்கள் துரைத்தனத்துக்குமுன்னே பாண்டியதேசத்தின் பூர்வீகமான பெருமைகளும் சோழதேசத்தின் பிரதாபங்களும் மறைந்துபோய்விட்டன வல்லாள ராசாக்கள் பலவீனப்பட்டதினுற் பழைய துரைத்தனக்காரருக்கு அவர்களுடைய பூர்வீகமான அதிகாரத்தைக் கொடுப்பது கூடாமற்போயிற்று வல்லாள ராசாக்கள் பலவீனப்பட்டிருந்த காலத்தில அவர்களுக்குள்ளாயிருந்த தேசத்தார்களும, அதிகாரஸ்தர்களும தலையெடுத்துச் சுவாதீனரானுர்கள் இப்படியெல்லாம் மாறுபட்டுப்போனதேதினுலெனில், பதினுலாஞ் சதகத்தில் துலுக்காணத்தார் சண்டைதொடுத்ததினுல விளைந்த கலகத்தினுலேயும, தமொந்தரத்தினுலேயும, மேற்படி துலுக்காணத்துக்கு அடுத்தாற்போல விசைய நகரத்தி ராசாக்களுடைய அதிகாரம வந்துவிட்டதினுலேயும கடைசியில விசைய இராசாக்கள பாண்டிய இராசாக்களுடைய ஸ்தானத்திற் பதினறுஞ்சதகத்து ஆரம்பத்தில நிலைத்துப்போனதினுலேயும, உண்டானதாயிருக்கிறது இவர்களுடைய கதைகளெல்லாஞ் சற்றேக்குறையத் திட்டமாயும ஒத்ததாயுமிருக்கிறபடியால மதுரைதேசத்தின் சரித்திரங்களை முடிவுந தெளிவாகக் காணகிறது இந்த இராசாக்களைக்குறித்துச் சொல்லுகிற காரியங்களை எல்லாம விபரமாய் எழுதுகிறதற்கு முன்னமே கூனபாண்டியன் துரைத்தனத்துக்கும மதுரை நாயக்கர்களுடைய பிரபுத்துவத்துக்கும மத்தியில் நடந்த விருத்தாந்தங்களை எல்லாம பூர்த்தியில்லாவிட்டாலுந் தெரிந்த மட்டுஞ் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

(இன்னும வரும)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

௰௧. அதிகாரம்.

[An Embassy sent to the Prophet from Medina—Enters into a league with them—Sends thither a Missionary—Another deputation sent to proffer him an asylum in that city—His enemies renew their persecutions—Determines to fly to Medina—Incidents on the way—Makes a solemn entry into the city—Apostate Christians supposed to have joined in tendering him the invitation]

மக்கநகரியில மகமதுநபி அனைவராலும் நகைக்கப்பட்டும் பகைக்கப்பட்டும மத்தினுநகரியில அவருடைய மதம்பிரபலியமாயிற்று மத்தினுநகரி பூருவகாலத்தில் (Yatreb) யேத்திரேப என்றபேராயழைக்கப்பட்டு மக்கநகரியிலிருந்து கிட்டத்தட்ட (௨௱) மயிலதூரத்துக்கப்பாற்(Hejaz) கெச்சாஸென்ற மாகாணத்தினுத்தராந்தத்திற் கிடக்கிறது இவ்விடத்திலிருந்து முதன்முதலெண்ணுமெழுத்தும்பற்பல சாத்திர சூத்திர விற்பன்னங்களுமுண்டாயின இவ்விடத்தில அஞ்ஞான அரபியரும், யூதரும, கிறிஸ்துமதபேதிகளுங் குடியிருந்தார்கள் இக்காலத்தில இப்பட்டினத்திலே கேறிசிறரிஸ(Harejites)ஓசிற்றிஸ (Awsites)என்ற இருவகைக் கோத்திரத்தாருக்குள்ளும அனுதிதொடுத்துச் சந்தானச்சச்சரவுகள்நடந்தன. கேயாபாகோவிலுக்கு யாத்திரைபண்ணின அநேகர் மகமதுபண்ணினபிரசங்கத்தைக் கேட்டதினுல மகமதுமதாநுசாரிகளாகி மகமதுவுக்கு உயிர்த்துணையான சிநேகராயிருந்தார்களென்பதற்கு த்தாட்சியென்னவெனில மகமது சுவமதத்தைப் பிரபலியப்படுத்தின(௬௨௰)வருடத்திலே(௰௨)பேர் மக்கத்திலிருந்து அதற்கு உத்தரதிசையிலிருக்கிற அல அக்கேபா(Al Akaba)என்றமலையில மகமதுவண்டையில வந்து பண்ணின பொருத்தனையாவது நாங்கள்

இனிமுதற்கொண்டு நாங்கள் விக்கிரகவணக்கத்தைவிடுவோமென்றும் களவும் விபசாரமுஞ் செய்யமாட்டோமென்றும், அஞ்ஞான அரபியர் தங்கள் பிள்ளைகளைக்கொன்றதுபோல நாங்களுங் கொல்லமாட்டோமென்றும், யாதொருவரையும் புறங்கூறுமல் நியாயமான காரியங்களிலும் உமக்குக் கீழ்ப்படிவோமென்றும்" சபதம்பண்ணினார்கள். இப்படியவர்கள் பொருத்தனை பண்ணிக்கொண்டதினால் மகமது தம்முடைய நவமதத்தின் சத்துசாரத்தையும், செய்கைக்குரித்தான வொழுங்குகளையும் அவர்களுக்குப் போதிக்கும்படி தமது சீஷரிலொருவராகிய மேசப் இப்ன் ஒமேயர் (Masab Ebn Omair) என்பவரை அவர்களிடத்துக்கனுப்பினதினால் அவருடைய அநேகரை மகமதுமதாநுசாரிகளாக்கினார். அவ்வநுசாரிகளில் ஒசேயிட் இப்ன் கோடீரு (Osaid Ebn Hodeira) என்பவர் அந்நகரிக்கு முதலாளியும், சேயட் இப்ன் மோவட் (Saad Ebn Moadh) என்பவர் ஒசிற்றிஸ்வருணத்துக்குப் பிரதானியுமாயிருந்தார். காரியத்தைப் பார்த்தால் அப்பட்டினத்தில் மகமதுமதாநுசாரிகளில்லாதவீடொன்றுமிருந்ததில்லையென அறியவந்தது.

பிறகு (௰௩ம்) வருடத்தில் மக்கத்திற்சனங்களொருமிக்கத்திரண்டு மகமதுவை விரோதித்துப் பகைத்ததை மேசப் என்பவரறியவந்தகாலையில் அவருக்கு உதவிசெய்யும்படி மதாநுசாரிகளில் (௭௫) பருடர்களையும் (௨) ஸ்திரிகளையும் வேறுபல அவிசுவாசிகளையுங் கொண்டுவந்து அவர்கள் மகமதுவுக்குப் பண்ணின பொருத்தனையாதெனில் உம்மையனைவருந்தள்ளி அப்புறப்படுத்திப்போட்டாலும் நாங்களோ உம்மையெங்களொன்றுகூட்டான ஆளாக்கி உமக்குக் கீழமைந்து உமதுயிரிறுமளவும் எங்கள் பெண்சாதி பிள்ளைகளைப்போல உம்மையனைத்திலுமிருந்து விலக்கிக்கொள்வோம். உம்முடைய புதிதது்ணைவர்களாகிய நம்மைக் கைவிடுவீரோவென்று கேட்டதற்கு மகமது சொன்னது எல்லாப்பொருளு மெங்கண்டுவே சாதாரணமாயிருக்கின்றன. உங்களுதிரமென்னுதிரம்போலவு முங்களுக்கு வருகிறகேடுகள் நமக்கு வருகிற கேடுகள் போலவுமிருக்கும். நானுங்கள் மித்துருவு முங்கள் சத்துருவுக்குச் சத்துருவாயுமிருப்பேன். அதற்கு மாறுத்தரமாக அவர்கள் சொன்னது, நாங்களுமக்காகச் சாவவேதுவாயிருந்தால் அப்போ எங்களுக்கென்ன கிடைக்கும். அதற்கு மகமது சொன்னது, உங்கள் பங்கும் பலனும் பரகதியே என்றார். இப்படியே அவர்கள் பொருத்தனைபண்ணிக்கொண்டு போனபிறகு, கிறிஸ்துநாதர் (௰௨) சீஷர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தரமளித்ததுபோல மகமதுவும் (௰௨) பேரைச் சீஷராக்கி அவர்களுக்கதிகாரத்தையுங் கொடுத்தார்.

ஆபுதாலப் என்பவருடைய பட்டத்துக்கு ஆபுசோபியன் (Abu Sophyan) என்பவரிராசாவாக வந்தவுடனே அவர் மகமதுவையும் அவர் கூட்டாளிகளையும் படுகூரணம்பண்ணும்படி கோறிஸ்வங்கிஷத்தாரையும் அவர்கள் துணைவரையும் அழைப்பித்தாலோசனைபண்ணித் தாங்களெண்ணின யுனைக்ருட்டை முடிக்கும்படி தங்களுடனுடம்படிக்கைபண்ணின ஒவ்வொருகோத்திரத்துக்கொவ்வொரு ஆளை நியமித்து ஒவ்வொரு வாளையும் அவர்கள் கைகளிற் கொடுத்தெத்தனமாயிருந்தார்கள். இப்படியவர்களெண்ணியிருக்குங் கொடும்பாதக யோசனையைப்பற்றித் தனக்குக் காபிரியேல் தூதன் சொல்லியிருக்கிறதாக மகமது சொல்லுகிற தென்னவெனில், உமக்கு (மகமதுவுக்கு) விரோதமாகச் சனங்களெழும்பி உம்மைக் கட்டவும் மறியவிறப்போட்டு உமதுயிரவதைக்கவும் பட்டணத்தை விட்டும்மை யகற்றவும் யோசனைபண்ணினார்கள். ஆனாலும் பராபரனே அவர்களுக்கு விரோதமாக யோசனைபண்ணினார். இந்தக் கொடும்பாதக யோசனையிலிருந்து விலக்கிக்கொள்வதற்கு வழியென்னவாகில், மகமது அந்நகரைவிட்டுச்சீக்கிரந் தப்பி மதீனாவுக்குப் போவதே நலமென்று தூதன் சொன்னான். உடனே அவ்விரவில் ~~அவ்வரவர~~ மகமதுவை ஒரு சிலையிற்சுற்றித் தன தலைமாட்டில் வைத்ததினால் அவர் வீட்டை முற்றிகைக்கப்போட்டு மகமதுவைப் பிடிக்க வந்த ஆட்களின் கண்ணுக்கப்படாமல் ஆபுபக்கர் என்பவருடைய உதவியினால் மகமது பட்டணத்தைவிட்டு ~~[illegible]~~ தோர் (Thor) என்ற கெபியிற்சேர்ந்து அவ்விடத்தில மகமதுமாரகத்தினிமித்தம் ஒழித்தோடிப்போயிருந்த வேறி~~[illegible]~~ கண்டார். மகமதுவைக் கொல்லும்படி தொடர்ந்தவர்கள் இவரிருந்த கெபியைப்பார்த்து அதிலே புறாக்கூட்டையும், பொட்டுப்பூச்சி நூலையுங்கண்டு யாதொருசனமுமிதிலிருக்கமாட்டார்களென~~[illegible]~~ போய்விட, மகமது கெபியிலிருந்து மற்றிரண்டுபேருக்குஞ் சொன்னது நீங்கள் நமக்கு ஒத்தாசைசெய்யாவிட்டாலும் மெய்யாகவே ~~ஆண்டவன்~~ அவருக்குதவி செய்வார். பிறகு மகமதுவும் அதி சீக்கிரங் கெபியைவிட்டு அடைக்கலப்பட்டினத்திற் (௰௬) நாளுக்குள் வந்துசேர்ந்து கோபா ~~(Koba)~~ என்ற ஊரில் ~~[illegible]~~ (௩ா) சனம் அவரைப்பிடித்துக் கொல்லும்படிவந்து பதிவிருந்தாலும் அவரைக் கண்டவுடனே சந்தோஷமாய் அவரை மின்விதொண்டார்கள். உடனே மகமது ஒரு ஒட்டகத்திலேறி ~~[illegible]~~ மகமது ஓடிப்போன ஓட்டத்துக்கு அரபிபாஷையிலே ~~[illegible]~~ (Hejira ~~or Hejra~~) என்றுபேர். இது கிறிஸ்துநாதர் பிறந்த (௬௱௨௰௨) வருடத்தில் ~~[illegible]~~ நடந்தது. ~~[illegible]~~ மகமது வுக்கு வயது (௫௰௩). மகமது ஒட்டகத்திலேறி ஊர் சேர்ந்த வேளையிற சிலபாசாண்டக்கிறிஸ்தவர்கள் அவரை மின்வி அழைத்தார்கள் என்று தோன்றுகிறது.

தென்சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதி.

[Missionary Enterprises in the South Seas.]

௯௰ம் பக்கத்தினின்று

கிறிஸ்துமார்க்கம் இந்த (இராயதோங்கு) தீவாருக்குட் பரம்புகிறதற்கு இருந்த பாரமான தடைகள் நீங்கப்பட்டாலும் அவர்கள் விசுகிரகாராதனையைக் கொண்டாடின காலத்திலே அவர்களுக்குள்ளிருந்த தேச வழமைகளும், கட்டளைச் சட்டங்களும், பழக்கம் பரிசனைகளும் இன்னுஞ் சற்ற தடைகளாயிருந்தன. (தகதியன்) தீவு (சேசாயுத்தி) தீவு ளிலுமுள்ள குருமார் கொஞ்சக்காலத்துக்கு முன்னே புது ஒழுங்குகளையும் புது நியாயப் பிரமாணங்களையுமுண்டாக்கி மார்க்கத்துக்கிடறலில்லாமல் வழங்கிவரப்பண்ணினார்கள். ஆகையால் நாங்களும் மார்க்க வளர்த்திக்காகவுஞ் சனங்களுடைய நன்மைக்காகவும் வாடிக்கையாயிருக்கிற பழக்கங்களை மாற்றிப்போடுவது தகுதியாயிருக்கின்றதென்று கண்டு இதைக்குறித்துப் பேசினோம். ஏனென்றால் கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்குள் அறிவிக்கப்படுமுன்னம் குற்றஞ் செய்தவர்களை ஆக்கினைபண்ணி அவர்களிடத்திற பழிவாங்குகிற விதம் மிகவுங் கொடுமையாயக் காணப்பட்டது. ஒருவனை ஒருவன் அடித்தால் அடிபட்டவனுடைய சினேகிதர் எல்லாருமாய்க் கூடி அடித்தவன் வீட்டுக்குப் போய் அவனுக்குள்ளதெல்லாவற்றையும் பறித்துப் பாய முதலாயுக் கொள்ளையிட்டுக்கொண்டுபோகிறது மல்லாமல் அவன் வீட்டைத் தகர்த்து அவன் வளவிலுள்ள மரங் கொளெல்லாவற்றையுங் கூடத் தறித்துக் கொட்டிப்போடுவார். ஒருவன் களவெடுத்தால் இராசாவின் உத்தரவினாலே அவனைப் பிடித்து அந்தவிடத்திலேதானே கொலைசெய்து அவன் தலையைத் துணடித்துத் துண்டங்களாக்குறிக்கப்பட்ட ~~[illegible]~~ க்கிலைப்பார்க்கள். களவெடுக்கிற பையன்களைக் கண்டால் அவர்கள் காலிலே பெரிய கல்லைக் கட்டிக் கடலிலே தள்ளிவிடுவார்கள். இப்படி ஒரு காரியம் ஒரு முறையிலே சம்பவித்தபோது அந்த ஊரிலே குடித்த போதகர்களிலொருவர் ஒரு பையனைக் கடலிலே விழுந்தெடுத்துத் தப்பவைத்தார்.

இவ்வித அற்பக் குற்றங்களுக்கு அவ்வளவு கொடிய ஆக்கினைபண்ணுவது முறையல்லவென்று அவ்வூர்ப் பிரதானிகளுணரவேதுவாயிற்று. ஆகையால் மார்க்கம் பரம்புவதற்கு அதின் முறைமைகளுக்கிணங்கிய புதுவொழுங்குகளுண்டாக்கப்படுவது அவசரமென்று கண்டதினாலே பிரதானிகளும் நாங்களுமொருமிக்கக் கூடிக் கிறிஸ்துமார்க்கப் போதனைக்கு முழுவதும் மனுஷர் ஒருவரை ஒருவர் இன்பட்சமாயச் சினேகிக்கவும் தீங்குசெய்யாதிருக்கவும் தேறுதலடைந்த சாதிகளுக்குள்ளிருக்கிற கோட்டு நியாயப்பிரமாணங்களைப் போல நாங்களுமொருமுறை ஏற்படுத்திச் சனங்களுக்குட் பிரபலியம்பண்ணினோம்.

இவ்விதமாக நாங்களுண்டுபண்ணின கட்டளைச் சட்டங்கள் சில பொல்லாத வாலிபருக்குப் பிரியமாயிராததினாலே அவர்கள் இந்தக் கட்டளைச்சட்டங்களையும் அரசாட்சியையும் புரட்டி என்னையும் என கூட்டாளியாகிய (பிறறுமனையும்) கிறிஸ்துமார்க்க வளர்ச்சிக்குதவியாயிருந்த (தமத்தோ) என்னப்பட்ட அந்த ஊர்ப்பிரதானியையுங் கொலைசெய்யப் போட்டயோசனையாயிருந்தார்கள்.

அவர்கள் பண்ணின யோசனையை எப்படி நிறைவேற்ற நினைத்தார்களென்றால் நாங்கள் இருக்கிற வூட்டுக்குக் கிட்ட ஒரு சிறுதீவிருந்தது. அதற்கு இரண்டு மூன்று கிழமைக்கொருக்கால் ஞாயிற்றுக்கிழமை முறைகளில் நான் போய்ப் போதிக்கிறது வாடி-

கையாயிருந்ததினாலே அங்கே போகிறதற்கு வாடிக்கையாகச் சனிக்கிழமைகளிற் புறப்படுவேன். எப்போதும்போல நான் புறப்படவேண்டியிருக்கையில் என்னை அந்தத் தீவிலே கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வள்ளத்தைத் தாங்கிக்கொண்டுபோக நாலு கூலிக்காரர் வந்துநின்றார்கள். இவர்கள் அந்தச் சதியோசனைக்காரரின் கூட்டாளிகள். இவர்கள் நாலு பேரும் என்னை நடுக்கடலிலே தள்ளிப்போடவும் அவ்வேளையிலே இவர்கள் கூட்டாளிகள் வீட்டிலிருக்கப்பட்ட (திறகல) என்னப்பட்ட குருவையும் தமதோ என்னப்பட்ட பிரதானியையும் ஊரிலேதானே கொலைசெய்துபோடவும் எண்ணியிருந்தார்கள். ஆகிலும் தேவ செயலினாலே இந்த மோசத்திலிருந்து தப்பிக்கொண்டேன். எப்படியென்றால், நான் பயணத்துக்கு ஆயத்தப்படுத்தியிருந்த வள்ளத்துக்குச் சில பூசி வன்னங்கொடுத்ததினாலே என்னுடைய எண்ணம்போலச் சனிக்கிழமை போவதற்கு அந்த வன்னத்துக்குச் சேர்த்த எண்ணெய் காயாமலிருந்தது. பயணம் இப்படித் தாமதித்ததினாலே என்னைத் தாங்கிக்கொண்டுபோக வந்த சதியோசனைக்காரர் நாலு பேரும் அந்த நாளிலே அடிக்கடி வந்து "ஐயா! பயணம் புறப்படுகிறதில்லையோ, ஐயா, புறப்படுகிறது தானே" என்று மெத்தப் பிரயாசப்பட்டார்கள். நான் இவர்களுடைய யோசனையை யறியாததினாலே, சுவாபமான பேச்சாய் வள்ளத்துக்குக் கொடுத்திருக்கிற மை காயவேணுமென்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டேன்.

இந்தச் சதியோசனைக்காரர் தாங்கள் பண்ணியிருந்த யோசனையின்படி காரியங்கள் நடக்கமாட்டாதென்றெண்ணி இரண்டொரு நாளுக்குப்பின்பு வெளியரங்கமாய்ப் பொல்லாங்கு செய்யத் துணிந்து தங்களுக்குளொருவனைப் பிடித்து இலைகுழையினாலே அவனுடைய தலையையுஞ் சிவப்புக் கறுப்பு முதலிய சட்டைகளினாலே அவனுடைய மேனியையும் பொய்வேஷம்போலச் சோடித்துக் கையிலே ஒரு பட்டாக்கத்தியையுங் கொடுத்து நாங்களிருக்கிற வீட்டுக்கனுப்பினார்கள். இவன் நாங்கள் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருக்கிற வேளையிலே முற்றத்திலே வந்து நின்று "அந்தப் பன்றியெங்கே? அதின் குரல்வளையை யிப்பொழுது அறுக்கிறேன், அந்தப் பன்றியெங்கே? அதை இந்த நிமிஷமே கொல்லுகிறேன்" என்று சத்தமிட்டுச் சொல்லிக்கொண்டு கையில் வைத்திருந்த கத்தியையுருவிச் சுற்றிச் சுற்றிக் கூத்தாடினான். இவனுடைய மாதிரியெனக்கு எரிச்சலாய்க் காணப்பட்டதினாலே நான் சாப்பாட்டைவிட்டெழும்பி மோசமொன்றும் வராதென்றெண்ணிக்கொண்டு இவனுடைய கூக்குரலையும், நடனத்தையும் மறிக்க வெளிக்கிட்டேன். அப்படியே நான் வெளிக்கிடக் கதவுக்குள்ளே வருகையிற் குருப்பட்டத்துக்கு ஆயத்தமாயிருந்த வொருவன் ஓடி மூச்சில்லாதவனாய் வாசலிலே வந்து என்னை யுள்ளே போகத்தள்ளி "ஏன் வெளிக்கிடுகிறீர். ஏன் உம்முடைய சீவனை மோசத்துக்குள்ளேற்படுத்துகிறீர்" உம்மையல்லோ பன்றியென்று சொல்லுகிறான், உம்முடைய சீவனை யெடுத்துப்போடவே இப்பொழுது இவனிங்கே வந்து நிற்கிறானென்று சொல்லிக் கதவைப் பூட்டினான். அந்தப் பொல்லாத வாலிபர் பண்ணியிருந்த சதியோசனையையெல்லாம் இவனிந்த வேளையிலே எனக்கு வெளிப்படுத்தினான். இந்தப் பிரகாரமாக அவர்கள் பண்ணியிருந்த யோசனை எனக்குத் தெரியாததினாலே நான் மோசத்துக்கேதுவாயிருந்த இரண்டு நாளிலுங் கர்த்தர் என்னுடனே கூடவிருந்தாரென்றும் அதினாலே இந்தத் தீவாருக்கின்னுஞ் சிறிது காலமாக நன்மைசெய்யும்படிக்கு என் சீவனைத் தப்புவிக்கக் கர்த்தருக்குச் சித்தமாயிருந்ததென்றெண்ணிக்கொண்டு அவருக்குபகாரஞ்செலுத்தினேன். மற்றநாள் இந்தச் சதியோசனைக் கூட்டத்திற் சேர்ந்திருந்த அந்த நாலு பேரையுங் கொன்றுபோட அந்தத் தீவின் பிரதானி யெங்களை அழைத்து யோசனை பண்ணினார். நாங்களோ அவர்களுக்காகப் பலவகையான நியாயங்களையுஞ் சொல்லி அவர்களைத் தப்பவைத்தோம். குற்றவாளிகளை ஆக்கினைபண்ணும்படி சில கிறிமினல் நியாயப்பிரமாணங்களும் உண்டுபண்ணப்படவேணுமென்று அந்தப் பிரதானி யெங்களைக் கேட்டுக்கொண்டபடியினாலே நானும் (திற்கல) ஐயருமாகக் கூடி யோசனைபண்ணிச் சனங்களுக்குத் தெளிவாய் விளங்கத்தக்கதாகவும், அந்தத் தீவாருடைய காரியங்களுக்கிசைந்த பிரகாரமாகவும் உண்டாக்கிக்கொடுத்தோம். அதை அந்தப் பிரதானியுஞ் சனங்களிற் சிலருங் கூடிவாசித்துப் பின்பு மிகுந்த சந்தோஷத்துடனே ஏற்றுக்கொண்டார்கள்.

(To be Continued)

மகாத்துமாவான கழுதை

(The Canonized Ass)

அபிசீனியாவிலுள்ள மாசோவா தேயத்துக்கு வியாபார முகாந்தரமாய்க் கொந்தார் தேயத்திலிருந்து தம் கூட்டு வியாபாரிகளுடன் மகமது வருத்தக விருத்தாப்பியனொருவன் போகையில் தைக்கிரியென்னுநதி பெருக்கெடுத்திருந்ததால் எமேசன் நாட்டு வழியாய்ப் போகவேண்டிவந்தது. மாசோவா தேயத்துக்கொன்பது முறை பயணம்பண்ணிய பேர்க்கியென்னுங் கழுதையொன்று அவனிடத்து நின்றது. அது மிகவும் இளைத்துக் கிழடுபற்றிப்போனதால் ஒரு நாள் இராத்திரி இறந்துவிட, அதற்காய அவன் துக்கித்துத் தன்னோடொன்பது முறை பயணம்பண்ணிற்றென்று மற்றவர்களுக்குஞ் சொல்லி அதைக் கழுதைப் புலி தின்றுபோடாமல் ஒரு குழிவெட்டி அதிற் சேமம்பண்ணும்படி அவர்களுஞ் சற்றுத் துணைசெய்யவேண்டுமென்று கேட்க, அவர்களுந் தாங்கள் படங்குவீடுகளை விரித்துக்கொண்டிருந்த மலையருகே கற்பாறிலோர் குழியை வெட்டினார்கள். அப்போது கற்பாறிலிருந்து நீரூற்றொன்று புறப்பட்டது. அதிலே கழுதையைச் சேமம்பண்ணிக் கற்களை மேலே குவித்துப் பின்பு பயணம்போய்விட்டார்கள். சில நாளுக்குப்பின் அவ்வூரிலுடையார் புதிதாயொரு கற்குவியலையும் அருகே நீரூற்றையுங் கண்டு ஊர்களிலே போய்ச் சொல்ல அவ்வூர்க் குருக்கள் அங்கே வந்து கூடி மோட்சத்திலேயுள்ள ஆரோ ஒரு மகாத்துமா இறந்து தேவ கணங்களால் அவ்விடத்துப் புதைக்கப்பட்டிருக்கின்றதென்று சொன்னார்கள். சனங்கள் அதைச் சூழவொரு மதிலெழுப்பி அவ்விடத்துக்குக் கோணாமெரித்து எனப் பேரிட்டார்கள். இக்காரியம் ஊரெங்கும் பரம்பக் குருடர், முடவர், நோயாளர் தீர்த்தமாடவுந் தபம்பண்ணவும் வந்து கூடினார்கள். இச்சலத்தினால் அநேகர் சுகமடைந்தார்களென வீணாய்க் கட்டிவைத்ததால் இற்றைவரைக்கும் அது தேவஸ்தானமாயேயிருக்கின்றது. கழுதையிறந்து ஆறு வருடத்தின் பின் முன் சொன்ன வர்த்தகன் ஒரு முறை அவ்வழியாற் போகையில் கழுதையைப் புதைத்த சவக்குழியைப் பார்க்கவேண்டுமென்றெண்ணிப் போனபோது கோயிலையுங் குருக்களையும் நோயரையுங் கண்டு சற்றே திடுக்குற்றுத் திகைத்து நின்று ஒரு குருவிடத்திலே இங்கே ஏது கோவிலொன்று கிழம்பியிருக்கின்றதென்று விசாரித்தான். தன்னிலே தியான சிந்தையானவர்களின் நோய் மாறும்படி பூமியிலிருந்து நீரூற்றைத் தோற்றுவித்த மகாத்துமா ஒருவருடைய கல்லறை இங்கேயிருக்கின்றதென்று சொல்லக் கேட்டு வர்த்தகனவன் மகாத்துமாவின் கல்லறையா! அல்லவே என் கழுதையின் கல்லறை நானே அதை இங்கே புதைத்தவன். இங்கே என்னுடன் நிற்கிறவர்கள் அதற்குச் சாட்சியென்று சொன்னான். இதைக் கேட்ட குருக்கள் அவன் சோனகனென்றறிந்து அவன்மேற் பாய்ந்து அடித்து முறித்துப்போட்டார்கள். அடுத்த வர்த்தகர் துணைசெய்யாதிருந்தாற் கொன்றும்போடுவார்கள். அவன் தன் கழுதையின் கல்லறையென்றே பின்னும் முறுத்திச் சொன்னபடியால் அவர்கள் அவ்வூரின் இராசாவாகிய ஆச்சலதாமென்பவருக்கு முன் அவனை அழைப்பித்தார்கள். அவனை ஆக்கினைபண்ணவேண்டுமென்று குருக்கள் கேட்டாலும் இராசா வர்த்தகனுக்கும் வர்த்தகருக்குஞ் சிநேகிதனுமாயிருந்தபடியால் அதைக் கவனிக்கவில்லை. குருக்கள் தங்கள் மகாத்துமாவின் கல்லறையை இவன் கழுதையின் கல்லறையென்று நகைக்கிறானென்ன, அவனோ ஆம் சத்திய வசனமாய் அப்படித்தானென்னக் குருக்கள் இராசாவே உமக்கு முன் இப்படிப் பகருகிறானேயென்ன, அவனோ நானதை ஒப்பனைபண்ணுவேனென்றான்[illegible]து இராசா எப்படியென்று கேட்க அவன் அதனெலும்புகளைக் கிழறியென்றான். குருக்களோ நீ மகமதுமார்க்கத்தான் நீ முதற் கிறிஸ்தவனாகவேண்டும் அல்லது தேவஸ்தானத்துக்கு உன்னைப் போகவொட்டோமென்று சொல்ல இராசாவானவர் அப்படியல்ல, உம்மைக்கொண்டொப்பனைபண்ணுதுபோகிற கிறிஸ்தவனாகலாம், அல்லது வேற்றார் தண்டமிடலாமென்ன, அவர்களும் அதற்குடம்பட்டார்கள். இராசா காவலாட்களை அனுப்பினார். வர்த்தகன் கழுதையைத் தாழ்த்த இடத்திற்போய்க் கிழறி எலும்புகளையெடுத்து இவை என் கழுதையின் தலையோடுந் தாடை எலும்புங் காலுமல்லவாவென்று சொல்லித் தன்னைப் பெற்ற தாயினெலும்புகளைக் கண்டாற்போல அழுதான். குருக்களுஞ் சற்று முட்டுப்பட்டாலும் மகாத்துமாக்களுந் தேவகணங்களுங் குதிரையாகிறதில்லவாமேயென்று பின் அதட்டினார்கள். பின்பு இராசாவிடத்துக்குப் போனபோது வர்த்தகனவன் இக்குருக்களிலே யாரோனுமொருவர் ஒரு ம

காத்திமா குதிரையானதைத் தாங்கள் கண்டார்களென்று சத்தியமாகச் சொல்வாரேல் என்னைத் தாங்கள் நினைத்தபடி தண்டித்துக்கொள்ளலாமென்ன, குருக்களுந் தட்டுண்டுபோய் வானுடைய வெளிப்படுத்தலின் விசேஷத்திற் கண்டிருக்கின்றதென்றார்கள். இராசாவும் அப்புத்தகந் தேவனுடைய திருவாக்கானதாலே தேவனே ஆக்கினையிட இவனுக்கிடுவாரரென்று சொல்லியனுப்பிவிட்டார். (Translated from an old No of the Friend)

(Answer to the Question on Dreaming)

அகத்திருள் நீக்கும்படி ஒளியைக் காலுகின்ற உதயதாரகையைப் பிரசுரஞ் செய்யும் மகா கனம்பொருந்திய துரையவர்களுக்கு வந்தனம்

ஈ—அம்பலவாணர் என்று கையொப்பம் வைத்தவர் கனவு காண்பதைப்பற்றி எட்டாஞ் சஞ்சிகையிற் கேட்ட கேள்வி என்னுடைய சிற்றறிவுக்கு ஒரு மேலான கேள்வியாயிருப்பதாற் கனவு காண்பது ஏதினாலேயென்றும் எவ்விதமான காரியங்களைக் கனவிற் காண்கிறோமென்பதைப் பற்றியும் நான் சிறிது செய்யுள்களிற் கண்டிருப்பதைப் பின்னால் எடுத்துக்காட்டுகிறேன்.

"அச்செய்யுள்களாவன" (உடலறிவிளக்கம்)

தெரிசனங் கண்டுரைப்பதெனவென்று கேட்ட செய்திமிக
நன்று மாணாக்கனே கேள் - உரிசையறிந்தவன் மனமுங் கண்டு கேட்டு
உணர்ந்தியுருவறிந்தவனுடைந்து பேரும் - வரிசையுடனுணர்ந்திய
வா நாதந்தனில் வந்தொடுங்கும்போது பன்னிரண்டுமான - பரிச
மொன்றுயக் கலந்தமொரு கருப்பமாகிய பாலும் விந்துதனில் ஒடு
ங்கும் பஞ்சறிவுமறறே. ௧

விந்துபதினாறு விரலங்குலத்தில் விரைந்திரவிற் பறிந்தோடி மீழு
ம்போது - மூந்த யீராறுமுட்புகுந்து நானகு முன்மறித்துப் பின்த
ன்னிற் பாளிற்சேரு - இந்தவுடற்குள்ளிருந்த சீவனொன்றுமிப்புவியிற்
கண்டதெல்லாங் கண்டிருக்கும் - வந்துபருவுருப்போல மயக்கிவிக்கு
ம் வடிவுதனையின்னதென்று வகுத்துச் சொல்வோம். ௨

ஆறு கடல் குளம்போலும் கோவில்போலும் அரிவையர்கள் ச
ருவியுறவாடல்போலுஞ் சீறுமரவங்கள் புலி யானைபோலுஞ் சிவி
கைபெறு துரைராணுக் கூட்டம்போலும் - நீறு சிவபூசை தவஞ்செ
ய்வார்போலும் நிருவாணப் புருடர் சந்நியாசிபோலும் - பூசைவஞ்
செய்திருந்து தவஞ்செய்கிறப்போற் பொருந்த வடிவெடுக்கும்வெ
ளிமயக்கிதாமே ௩

தூரத்தி மறித்தொருவர் பிடித்திழுக்கிறப்போற் றூக்கி யெறிந்தி
ட்பறந்து போகுமாப்போல - அரத்தமனைத் தன்கொளுத்தி வேகு
மாப்போல ஆனபலவேஷமெடுத்தாடுமாப்போல - உரத்தபரங்கா
ட்டியிடு கனவுகண்டு வுறுமியுயிர் வெருவியச் சத்தோடெழுந்தப்புரத்
திவிருந்திடும்போது காயமிங்கே புறக்கிலே கெட்டுறங்குவிதம் புக
லுவோமே. ௪

செத்தசவம்போற் கிடக்கும் வலதழிந்து சினங்கள் பகைசெய
தொழில்கள் தானிழந்து - கற்றகல்வி சாத்திர மந்திரமிழந்து கரு
த்துசிவபூசை யுறவின்முறையிழந்து - உற்ற பெண்டிர் பிள்ளை பணங்
காசிழந்து யுடுத்ததுகிலாடை நல்லறிவிழந்து - நித்திரைகொண்டி
டுமாயக்கூடசியான நித்திரையுற்பனமறியார் நிறமூடராமே. ௫

சுத்தமெனுமாசூசந் தானிழந்து சூது கவடதில்லையந் தானிழந்
து - சத்தமெனுமாங்காரந் தானிழந்து தீட்டாண்மை செயவீரந்
தனையிழந்து - மெத்தவிசாரப்பட்டு சஞ்சலமிழந்து விரும்பியிடுமா
சைமுதருணிழந்து - நித்திரைகொண்டிடுமாயக்கூடசியான நித்
திரையுற்பனமறியார் நிறமூடராமே ௬

மந்தங்களபிமானமிழந்து தசையற்று மதிகெட்டுக்கிடந்துறங்கும்
போதுமுன்னே - விதங்களைப் பிறத்தெரிசனங்கள கனவுகண்டு விரும்
பி நிறகுமுட்டுயிரை யெழுப்பும்போது - யிதமபெறவே இரெட்
டோடிநாதந்தலைனை யெழுப்பிவிடும் பன்னிரண்டாங்கனவுநீங்கி - யு
தம்பியெழு தெங்குநிறைந்த திசராகியுடல் செவி வாய் கண் மூக்
கு உயிருமாமே. ௭

உயிர்ப்புடையன பஞ்சறிவதாகியின்று உயர்ந்த சிங்காசனத்தி
ருந்துமுற்றபோது - மெய்ப்புலையன இரவுகண்ட கனாக்களெல்
லாமென்று நினைத்திடப்பட்டியானே கண்டதென்று - சயிக்க முடியாம
அரைசதிடுவன் கண்ட தன்மையறிந்தவயொருவன் கற்றவித்தை
- பயிற்புவியேழ் தன்னையிரவழித்து நின்று படைத்திடுவன் றினமிறந்
து பிறப்பதாமே. ௮

பாங்கான பன்னிரண்டும் பதினாறுக்கும் பதியான மூதனுங்குந்
தெரிந்தபோது - நீங்காத நித்திலைசவந்துற்றவாறினிலையறிந்து பய
னுரைப்பார் நிலைகாணுதார் - ஆங்காரக்குருவாலுஞ் சீலராலுமறிய
வொண்ணாத்தரிசனத்தை அறிவதோங்காண் - நீங்காத நித்தி
ரைவிட்டகன்று நீயுஞ் சிந்தைதெளிந்திருப்பவரோடிணங்குவா
யே ௯

இச்செய்யுட்களின் கருத்து, முன்குறித்த அம்பலவாணர் அவர்களும் உதயதாரகையை வாசிக்கின்ற மற்றும் அறிவாளிகளுந் தங்கள் தங்கள் அறிவுக்கு இது தகும் நியாயமோவென்பதையும் நியாயமல்லவென்றால் தற்குநியாயத்தையும் இச்செய்யுட் பிழைகளையுந் திருத்தி உதயதாரகைவழியாய் யானுமறியும்படி அறிவிக்கக் கேட்கிறேன். இப்படிக்கு

௲௮௱௪௰௨ ஆ வைகாசி ௴ ௨௳ கலவியார்த்திப்பிரியன
வேலாயுதபிள்ளை குமாரன தம்பாபிள்ளை.

(On Female Education)

Written by an Educated Female

முகாமைக்காரரே,

கல்விக்குறைவிடமாகிய எங்கள் உதயதாரகைப்பத்திரிகை, எம சஞ்சிகையின் கண்ணே மாதா மாணுக்கனென்றொருவர் என்போலும் மிஸ்திரி சனங்கள் கல்விகற்பது உபயோகமெனச் சில நியாயங்களைக் காட்டியிருப்பதினால் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். இவ்விசேஷித்தகாரியத்தைப் பற்றி உடுப்பிட்டியிலொருவரெழுதினதைக் குறித்து அவர் குசலைசெய்ததாகக் காண்கின்றது. அவ்வளவுமெழுதும்படிக்கு முதற்காரணமாக நீங்களே சில வினாக்களை விளம்பினதற்காக உங்களுக்கு மிகுந்த ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். முகாமைக்காரரே, பெண்பிள்ளைகளுங்கள் பத்திரிகைக்கெழுதிக்கொள்ளப்படாதென்று நீங்களெங்ஙனுங் கற்பியாததினாலுங் கன்னியென்றொருத்தி முன்னொருமுறையிலுதயதாரகைப் பத்திரிகையைப்பற்றியெழுதியதை நீங்கள் மனப்பூரணமாயேற்றுப் பிரசுரஞ்செய்திருப்பதினாலும் பெண்பிள்ளைகளுங் கடிதங்களையெழுதிக்கொள்ளலாமென்று பாவிக்கவேதுவாயிற்று.

முகாமைக்காரரே, நீங்களிவ்வளவுகாலமாக இப்பத்திரிகையைப் பதிப்பித்து வந்தும், பெண்கள் கல்விகற்பது செவ்விதென்றொருவார்த்தையேனுஞ் சொல்லியிருக்கிறீர்களா! உங்களுக்குப் பற்பலகடிதமெழுதியிருப்பவர்களெவர்களாயினும் இத்தகைக் கனவினை நினைத்திருப்பார்களா! ஆண்பிள்ளைகளாகிய நீங்கள் பெண்பிள்ளைகளாகியவெங்களுடைய நன்மைப்பலன்களை இவ்வளவாய்த் தடைபண்ணுவதெவ்வளவு கொடுமையென்றுங்களுக்குத் தோன்றவில்லையே. நீங்களெங்களைப் பேரிற் கொஞ்சமாகுதல் இரக்கமுள்ளவர்களல்லவே—பேயுமிரங்கும் பெண்ணுக்கென்ற பழமொழியையுந் தெரியாதார்போலும்—ஆண்பிள்ளைகளாகிய நீங்கள் எங்கள் நன்மையைக்குறித்துக் கவலைப்படவிரும்புகிறதாயக் காணவில்லை. அப்படியிருக்க மூடத்தனமுமறியாமையுமுள்ள பெண்பிள்ளைகளெப்படி யுணரப்போகிறார்கள் அவர்களாலும் முடியாதே. என்றாலும் இந்நாட்களிலே குருமாருடைய தருமத்தினாலே எங்களிற் சிலர் கல்விகற்று நல்லறிவையுற்றுணரக் கடவுள் கிருபைசெய்திருப்பதினால் பெண்பிள்ளைகளுடைய நற்சீர் விருத்தியடைய வாரம்பமாயிற்றென்று சந்தோஷிக்கிறேன். ஆகையால் என்போலும் பெண்பிள்ளைகள் கல்விகற்பது நலமென்பதைச் சில பேருண நியாயங்களைக்கொண்டு லக்ஷணத்தமமான பிள்ளைகளாய்க் கல்விகற்றிருப்பவர்களுடைய கைக்கணிற் படாநிற்கின்ற திவ்யப்படலத்தை யுரித்தொளிர்த்தாற்போல் பண்ணவும் அச்சத்துடன் துணிவுற்றிருக்கின்றமையால் பெண்பிறந்தவர்களாயிருப்பவர்களுக்கு நன்மைசெய்வதென் கடனெனக் கண்டிங்ஙன் முயற்சியுற்றேன். உரோமைப்பட்டணம் ஒருமுறை அழிய வேதுவாயிருந்தபொழுதெனபோர்லு மோரொருபெண்ணினது சாதுரியவார்த்தைகளாற்றற்காக்கப்பட்டதுபோல அடியாருடைய வற்பமுயற்சி தேவகடாட்சத்தினால் அனுகூலித்திடவேண்டுமென்போலும் பெண்பிறந்தோர்க்குபயோகமாகும்படி கடவுள் கிருபைசெய்யப் பிரார்த்திக்கிறேன். ஆகையால் நீங்கள் பத்திரிகைதோறும் எனக்கிடந்தருவீர்களானாற் பெண்பிள்ளைகள் கல்விகற்பதைப்பற்றியொழுங்காகக் கடிதங்களெழுதியனுப்பப் பிரயாசப்படுவேன்.

இக்காரியத்தைக்குறித்து உங்களனமறுமொழியைக் காத்திருக்கின்றவுங்களூழியக்காரி
யாழ்ப்பாணம் சித்திரை மீ உகு. தி சுந்தரி

பத்திராதிபரின் குறிப்பு

பெண்பிள்ளைகளுங் கலவியிற்றோச்சியடைவது நலமென நிலைபெறுத்துமபடி சுநதரி அவர்கள்கொண்ட நற்கருத்துககாக மிகவுஞ் சந்தோஷமாகி அவாகள் தங்கள் கருத்தை உதயதாரகை வழியாய் நிறைவேற்றுமபடி கேட்டுககொள்ளுகிறோம

(Renunciation of Caste)

மகாகனம்பொருந்திய துரையவாகளுககு வந்தனம்.

உங்கள் பத்திரிகையினோசஞ்சிகையினுத்தம சுவிசேஷகனென்பவா சாதிவித்தியாச மிடையிட்ட வைபபுககட்டேயனறிப பின்னொருபொருடபட்ட காரியமலலவெனபதை ரூபித்துறுதிகாட்டுதற்கான அநேக உசிதநிருட்டாந்தஙகளையும விவிலிய போதஙகளையும் எழுதின கடிதத்தை நான வாசித்து மனபூாததியானேன் அவரெழுதினதற்குச் சாாபாய நானுமோா திருட்டாநதவினுவொன்றை வினவிச் சாதிவித்தியாசமேயிலலையெனமலைவறுககினறேன அதாவது, ஒருவனுடைய தகபபன செட்டியுந தாய நளததியுமானல அவாகளுடைய மகனெனனசாதி? தாய வழிபாாத்து நளவனுமெனறு சொலவிற் செட்டியாதற்குககாரணககிடககைமுறைபின்னெங்ஙனே? அ, ஆ! செட்டித்துரையனுயினுனெனறு சில யூகிகளுத்தேசிப்பார்களே—"கோடிசீமானுயிற் கொம்பெனச் செட்டியாவான" என்ற லௌகிகவிதியுமுணடு. சாதிவித்தியாசமேயில்லையெனப் பெரியோர்யாவருங்கூறிய பிரத்தியட்சமுஙகாட்டுகிறாகள்.

இதன்பேரிலினியொன்று விரிவாயெழுதிவிடுபபோம்

பருத்தித்துறை } காரைககால வெள்ளாளன்
வைகாசி ருதி. } இராமநாதா சந்தா

(On Tamil Grammar)

மகாகனம்பொருந்திய உதயதாரகைப் பத்திரிகைக்கு

நன்னூல கற்கப்புகுநத ஓா மாணாககன நனனூலிலவினுவுஙகடா- உதயதாரகையெனனுமபததிரிகையின வழியாயச் சகலருந தங்களுககு விளங்காத நற்கருத்துககளை வினவிபறிகின்றமையால, நானும நனனூலில எனககு விளங்காத ஓா நற்கருத்தை வினவியறியவேணடுமெனறுணாவுறறேன அஃதெனனவெனில, நாவினிடல்லை வீசடித்த விதியினோருபாயிரந் தோற்றியெனக கூறிய வழி, எநநூறகுமிருபாயிரமெனவென சிற்றறிவின விளககமாயிருககினறதாகையானிடபாயிரங்களுட பொதுப பாயிரத்தை எநநூற்குமிலககணமாகிய நனனூற்குக கூறினதாயிராதது காரணமபற்றி யஃதிஃதெனவோாந்திடககற்றறிவுடைய பெரியோர்சிற்றறிவுடையேனுககுச் சாற்றிவிககவேணடும இபபடிககு

வட்டுநகா சாத்திரப் பள்ளிககூடம் திலலையமபலம
இராமலிஙகன

(On Transmigration)

மறுபிறப்பு உண்டெனறு சைவசமயத்திற் சிறிது மகாத்துமாக்களன்றி மற்றும அநேக தவத்திகள் இருஷியேசுராகள் முதலான பெரியோர்கள் சொலலியிருககிற படியாலும இசசமயததைச் சாாந்த சமயஙகளேயனறி மறறெந்தச் சமயத்தவாகளும அத்தை யிலலையென்கிறபடியாலும, இத்தை வாசிக்கிற சைவசமயத்தவாகளாகிய முற்றுமுணாநத பெரியோாகள் இதுணடெனறு அத்தாட்சி பண்ணவேணும,அலலது இதுதப்பறை கிறிஸ்துமாாககத்திற் சொல்லியிருககிறதே உணமையெனறு ஏாததுககொள்ளவேண்டும. இதனறி இனனும அநேகவினுககள எனககிருககிற சமசியத்தால தோறறுகின்றன, அவைகளையும நான எழுதுமபோது அபபடியே நீங்கள் விடைகொடுககவேணும

இஙஙனம, தங்களூழியககாரன்.
யாழப்பாணம உஉதி. பஙகுனிமீ இராமன கிட்டினன்.

உதயதாரகாவிநோதருக்கு
[A Medical Query]

துரைகளே,

வைத்தியத்திலோர்வினு வினவுகிறேன். அஃதென்னெனின், முதலாவது, எலலா நோய்க்காரருககும உப்புப் புளிமுதலியவற்றைத் தள்ளி அரும பத்தியத்தில வைத்து மருந்துசெய்துவதே இத்தேசத்தில முழுதும் வழக்கமாயிருக்கின்றது உவத. பெருநூல அல்லாத சிலபல வைத்திய சாஸதிரஙகளில உப்பு புளி முதலியவற்றைத் தவிாககச் சொலலியிருந்தாலும் அவைகளெலலாம மகாகனமபொருநதிய முனியேசுராகளாற் சபிககபபட்டிருக்கின்றனவே யாவது அப்படியிருந்தும அசசபிககபபட்ட நூற்களிற் சொல்லியபடி உபபுப் புளி முதலியவற்றைத்தள்ளித் தற்சமயத்தில நோயக்கும் நோய்க்காரா பிரியத்திற்கும ஏற்ற புசிபபனவறறைக்கொடாமற் பரிகரிப்பதினுல அதிக கேடாய் முடிந்ததைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறோம சுவது ஆயுள் வேதத்திலோா பகுதியாகிய தேவ வைத்தியத்திற் சொலலிய செந்தூரம் முதலியவையே பிரதான அவிழதம அவவிதமான அவிழ்தங்கள் செயததற்குக குருவினறியமையா, அககுரு உபபுப்புளி முதலானவைகளசோாத்து உணடாககப்படுகின்றன ஆவது ஆகையால அவவவிழதஙகளும உப்புபபுளி முதலியவற்றை முதற்காரணமாககொணடிருக்கின்றனவே அபபடியிருகக நோயககும அந்நோயாளி விருப்பத்திற்குமேற்ற புசிபபனவற்றைக கொடாமல அருமபத்தியத்திற் போடவேண்டியதிலலையெனபதற்குதாரணம

தன்வந்திரிவாகடம்
சௌமியகாணடம்

துய்த்திடும்விருபபந்தோன்றத்துயினடைக்கிடையூறின்றிப
பத்தியமறபமாகப் பருவரறெனறுவண்ணம் எனவும,

சஷ்டமுனி நிகண்டு.

சாரம்விட்டாற்காரமிசை திஷகாரமாச்சுச் சகலருசசகலகருத்தயங்கிப்போசசு—எம்
அபபனேலவணமொடுகாரசாரமறிவாககச் சொலலிவிட்டெனமுப்பதுககுள்—எம்,

இவற்றிற்காதாரமாகச்-சிவஞான சித்தியார்

மணனுளே சிலவியாதி மருத்துவனருந்தியோடு
திணணமாயறுத்துக்கீறித் தீாத்திடுஞ்சிலநோயெல்லாங்
கண்ணியகட்டிபாலுங கலநதுடனருந்தித்தீர்க்கும—எம சொலலபபட்டிருக்கின்றது

ஆகையால நோய்க்காரரின் இச்சைச்கும் நோய்க்கும் ஏற்ற புசிப்பைக கொடுத்து அதற்காகிய அவிழதமபண்ணுமல் நோயை அனுபவிககிறவாகளை மேற்சொலலியபடி அருமபத்தியத்தில வைத்து வேதனைபணணுவது சரியோ சரியலலவோ எனபதை முறறுணாநத ஆயுள் வேதியா யோசனைபணணி இதிற் பிழையிருநதாற் பொறுதது நலவிடையை உஙகள் உதயதாரகையின வழியாக அறிவிகக மன்றுடிக் கேட்கிறேன் இபபடிககு

ரு அாசஉஆ சித்திரைமீ க தேதி
உடுபபிட்டி ஆயுள்வேதவிநோதன்

மாயவித்தைமலைவை விலக்கல்
(On the pretended miracles of the heathen)

மகா கனமபொருநதிய முகாமைககாரரே,

சாற்றரிய நீரினிற்றமபனஞ் செயதலுந தாவியதல் மேலேகலுந்தணலினுளிருததலுநதழலகையிலேந்தலுந தலையறுத்தெதிாகாட்டலுந்-தனதுகணகளைவாங்கியெதிாககீட்டலுந்-தயங்குநாவறுத்தெறிதலுந—தனமெடுத்திடுமையுந் தனைமறைத்திடுமையுந்தையலை வசயத்தினமையும—போற்றுமெட்சணிகளும் பூதங்களோட்டலும பொனவெள்ளிசெயுமவித்தையும புதலவரைபபெற்றிடச் சூளிசஙகளசட்டலும போகிககமணி செயதலும—புகைதானுமினறியே சூதமுதலகட்டலும புகலுமாரணவிதததையும-பூமிவட்டஞ்செலக் குளிகைசெயவிததையும பொசிப்பகறறிடு விததையுங்-கூறாதைமறிததிடச்சமாதியிலிருத்தலுங் கூடுவிட்டுக்கூடேறலுங—குலவுநரைதிரைமாற்ற கறபமதுகொளளலுஙகோகரணகெசகரணமுங—கூறுமிநதிரசாலமயேந்திரசாலமுங கோபுரமவிழுஙகுதொழிலுங-குறளியாறபலலகருமிதேறவித்தையுஙகோடிசெபபிடு வித்தையுங—காற்றையுட்டமபனஞ்செய்து மேலெழுதலுங் காட்டுகணகட்டுதொழிலுங் - கழறுபலதேவதைவசியமுங குளத்துநீரைகரையேறிவரச்செயதலு - தருக்குமிவைமுதலான பலகோடிவித்

தையுங் காட்சியிற்காணில பொய்யே —காரணனை நித்தியபரிபூரணனை வழிபடுங்காட்சியொன்றஃது மெய்யே

இவற்றினுட் சில கருவிகளாலுங் கைச்சமர்த்தினாலுஞ் செய்வனவன்றிச் சில அசம்பவமாகவேயிருக்கின்றன சிலர் இவைகளைத் தேவவல்லமையாற் செய்தோமென்று உலகத்தாரை வஞ்சிக்கிறார்கள் வஞ்சியபோர் வஞ்சனையையும் வஞ்சிக்கப்படுவோர் மயக்கத்தையும் முகத்திற்கண்ணாடிபோல மேற்கண்ட முறையே தெளிவாக்குவோம் இப்படிக்கு சத்தியப்பிரியர்

க நாகமுத்தர்பிள்ளை பொன்னங்கால
சுப்பிரமணியக்கவிராயர்.

சகத்தாதிசாட்சி
[The world not eternal]

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

அதிட்டானசைதன்னியத்தினகண்ணே சகத்துஅபிவியாபகமான காலையில அஃது அநாதிநித்தியமென்றும், அவ்வதிட்டான சைதன்னியத்தினின்று அச்சகத்து ஒரபசிலெட்டமான காலையில அஃது ஆதியநித்தியம் -என்றும், சிலர் சொல்வது ஆகமசாஸ்திரங்களுக்கு அந்நியாசமே. ஏனெனின், அநாதிகாரணவஸ்துவாகிய பிரமத்தினிடத்திலே ஆதிகாரியவஸ்துவாகிய பிரபஞ்சந் தோன்றியது—இப்பிரபஞ்சத்தைப்பிரமத்தோடுசேர்ந்த அநாதிநித்திய பதார்த்தமென்றதெப்படி? அப்படியானால் அந்தப் பிரமத்தைப் போல இந்தப் பிரபஞ்சமுஞ் சாசுவதமாக இருக்கவேண்டுமே அவ்வாறில்லாமற் பிரபஞ்சந் தோன்றி அழியவேண்டியதெனனே? ஆதலால் சமட்டிவடிவாகிய மாயை அநாதி என்றும—வியட்டி வடிவாகிய சகத்து ஆதியென்றும், ஆகமிகள் சொன்னவை சரியே இன்னுமாகம சாஸ்திரங்களிலலாமற் பரத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமில்லையென்றும் சகத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமுண்டென்றும் பிரத்தியட்சமாக அறியலாம பஞ்சலட்சணபிரயோகப் பயன, நித்தியஞ் சுத்தமாயை நிலைபெறு தசுத்தமாயை என்றதும்-வாதிட்டம்-பரமம்மெங்குமென்றுமுண்டாரும, என்றதும -அந்தரறமொன்றிய விகற்பமற்றறிவாயழிவிலாப் பிரமமேயிருக்க என்றதும,பிரபுலிங்கலீலை பரசிவபிரமமென்னும பாடலமுதலா நான்கு பாடலும, வேதாந்தசூடாமணி—நீங்கியவிகாரபபிரமமாமீசன என்னும பாடலமுதலாக நானகுபாடலுங் காண்க.

இப்படிக்கு களத்தூர்,
சுவாமிமுதலியார் குமாரன் முருகேசமுதலியார்

An explanation of a verse from the Old Saying (மூதுரை)
சமரசம்.

மூதுரையில், “கவையாகிக்கொம்பாகிக் காட்டகத்தேநிற்கு
மவையெல்லாமல்ல மரங்கள் சவைநடுவே
நீட்டோலைவாசிக்க நின்றான்குறிப்பறிய
மாட்டாதவனேமரம்”

இச்செய்யுள் பாலெனவெள்ளையும பாவலர் பாவினுள்வெள்ளையும பாவுக்கசைசிரும படித்தவர் நாவுக்கிசைசிருமாயப பண்டுதொட்டுவழங்கி வருகின்றது சுமபென வழங்கிய சொல உலக வழக்கிலன்றிச் செய்யுள் வழக்கிலியைந்தன்று ஆதலிற் கொம்பென்பதே நயந்ததிங்கு “நல்லமரமல்ல” என்பதும “சவையகத்து” என்பதும பாடமாயிருக்கின்றன “நீட்டோலைவாசிக்க நின்றான்குறிப்பறிய மாட்டாதவனேமரம” என்றதை நீட்டோலைவாசியாநின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம. எனத்திரித்து நீட்டிய வோலையை வாங்கி வாசிக்கமாட்டாமல மலைத்து நின்றவனும ஒருவர் குறிப்பை யின்னதென்று அறியமாட்டாதவனுமே நல்ல மரமாம என்று சென்னைபட்டினத் தச்சுப்பிரதியிலும மாணிப்பாயில அச்சுப்பிரதியிலு மெழுதப்பட்டிருக்கின்றது இஃது கற்றவர் சொற்ற மூதுரைக்கெதிருற்றவர் தாகக்மோதுரையாம அன்றியும வாசியாநின்றான என்பது வாசிக்கமாட்டாமல மலைத்துநின்றான் எனச் சொற்கள வருவிக்கப்படுதலானும வாசிகின்றான என உடன்பாட்டு வினைப்பயனுங் கொள்ளுந்தன்மையானு மது பாடமின்மையானும் வாசியாநின்றான என்று கூறுதல முன்னவர் பாடலை மாறுதலாம, இனி நீட்டோலைவாசிக்க நின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம. என்றதற்கு என சிற்றறிவிற்றோன்றிய மட்டு மெழுதுகின்றேன், நீட்டிய வோலையை வாசிக்கமாட்டாதவனுந் தன்னெதிர் நின்றவனது குறிப்பின்னதென வறியமாட்டாதவனுமே மரமாமென்றவாறு. “வாசிக்க, அறிய” என்னுமிவ்விருவினையெச்சங்களும மாட்டாதவ , என்பதில எதிர்மறைமுற்றுவினைகொண்டு வாசிக்கமாட்டாதவர், நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் எனத் தனித்தனிமுடிந்தன. மாட்டாதவன, கடைநிலைத்தீபம நின்றான், வினையாலணையும்பெயர் நின்றான்குறிப்பு நின்றானதுகுறிப்பென விரிந்தது. கல்லாதவனையுங் குறிப்பறிய வொல்லாதவனையும் முதற்பிறப்பாள மனிதரினின்றும பிரித்துக் கடைப்பிறப்பான மரமாமெனப் பொருள் விரித்து நிற்றலின மாட்டாதவனேயென்னு மேகாரம பிரிநிலையில வந்தது நீட்டோலை, தேமாங்காய வாசிக்க, தேமாங்காய நின்றான, தேமா குறிப்பறிய, கருவிளங்காய மாட்டா, தேமா. தவனே, புளிமா, மரம, மலர் எனமுடிந்தது இவற்றைச் சமருசெய்து சீர்தூக்கிய கோலபோலபவரே யுய்த்துணரக்கடவர்.

வல்லிபுரத்துறை இப்படிக்கு
சித்திரை ௨ ௨ தி கதிர்காமர் ஏகாம்பரம

கண்வளர்வாரைக் கடிதினெழுப்பல்

உதயதாரகையின முகாமைக்காரருக்கு
மகா கனம்பொருந்திய ஐயாவே,

திருவெண்ணைநல்லூர் காத்திகேயர் குமாரன் இராமலிங்கபிள்ளைஅவர்கள் கடாவிய கடாவுக்கு, கு கந்தரவேற்பிள்ளையும், தாமோதரம்பிள்ளை சுந்தரம்பரப்பிள்ளையும விடையெழுதாமல மெளனமாயிருப்பது மிகுந்த ஆச்சரியமாகவிருக்கின்றது மேற்குறித்த இராமலிங்கபிள்ளை அவர்கள் உசாவிய உசாவுக்குச் சரி ஒன்றிலஅவர்கள் துயிலவதை விட்டெழுந்து அவவினாவிற்கு உத்தரமெழுதவும அல்லது அவர்கள் தங்களுக்கு விளங்கவில்லையென்று எழுதவும அப்படியே செய்யாமல இருப்பது சரியல்லவென்றுணர்ந்து இருவரும அதற்கடுத்த வழியை உதயதாரகை வழியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன இப்படிக்கு

[illegible] மட்டைநகர்
சோமநாதர் தவர் குமாரன விசுவநாததேசிகர்

பயனயமின்றிக் கிறுக்கிய கடாக்களை யுறுக்கிய திறன்மொழி

உதயதாரகைப் பத்திரிகையை நடாத்துமுத்தமரவர்களுக்கு எழுதுவது,

தங்கள் உதயதாரகைப்பத்திரிகையில், எமது பக்கத்தில காத்திகேயர்குமாரர் இராமலிங்கபிள்ளையெனபவர் இருகடாப்பொறித்தார் “ஒன்றறிவதுவே” என்பதற்குப் பொருள் சரியட்டவில்லையெனப் புகல்கின்றார் பொருளேதினும் சரிப்படவில்லையென்று அவர் புகலவரேல மருளகன்று தெருளுற்றிடவோர் விடை எழுதுவோம அதுநிற்க, அவவிராமலிங்கபிள்ளை எனபவர் “தோறகாதுபோரவை துலைக்காது முட்டை” என்பதை யாதுநாலினுள்ளதென வினவுகின்றார் அத்திருவெண்ணைநல்லூரிறைவனே சடையருக்கு முன்பாகக் கலவியிற் சிறந்த பெரியகம்பரரங்கேற்றிய இராமாயணத்தையேனும அதற்கு உதாரணமாகவுங் கண்டறிந்திலரா? அதினால அவர் அவ்வூரவரல்லவென்று விளங்குகின்றது

இங்ஙனம,
உடுப்பிட்டி திருவலவை கு. பள்ளிக்கூடம
கு. கதிரைவேற்பிள்ளை } இருவர் கைப்பப்பம
தா சிதம்பரப்பிள்ளை }

☞ மேலே கண்டிருக்கிற “பயனயமின்றி” என்ற கடிதத்துக்குத் தேதியில்லாதிருந்து வெகு நாளைக்குமுன் வந்தும அச்சிடப்படாமலிருந்துபோயிற்று உதயதாரகைப்பத்திராதிபதி

உதயதாரகையை நடாத்திவருங் கனம் பொருந்திய ஐயா அவர்களுக்கு வந்தனம

தங்கள தாரகை, ௫ ஆ. சஞ்சிகை, ௫௬ம பக்கத்தில விரிக்கப்பட்ட கடாவுக்குத் திருமறுவறைவேளாளர் தெய்வம வருணனென்றவருணருக

இவை பலவுணர்ந்த சிங்கமிதுவுணராதனெற்ற- னவையெனவுணரான கொலலோ நவின்றிடுமேதுவென்னை- புவனமுழுமுயிரும யாவும புரந்திடுமெந்தை யாதும- நவமுடனேயதுவானனலதக செயதுமோக்கம இங்ஙனம தங்கள் பணிவிடைக்காரன,

யாழ்ப்பாணம வண்ணைநகர் ஓர்வேளாளன
சித்திரை [illegible] தி

உன் பராபரனைச் சந்திக்கிறதற்கு எத்தனப்படு
[Prepare to meet thy God]

மனந்திரும்பாத பாவியே! பராபரன் உலகத்தை நடுத்தீர்க்கிற நாளொன்றுண்டு. அந்நாளில் யாவரும் அவருடைய சன்னிதானத்திற் சேருவார்கள், நீயும் அவர்களிலொருவன். ஆதலால் உன் தேவனைச் சந்திக்கவெத்தனப்படு, அவர் பரிசுத்தர், அவர் பாவத்தை அரோசிக்கிறவர், அவர் பாவிகளை வெறுக்கிறவர், பொல்லாங்கரைப் பகைக்கிறவர். நீயும் பொல்லாங்கன், நீயும் அவரை மறந்துவிட்டாய், அவருடைய வசனத்தைவெறுத்த நீ, அவர் விதித்த பிரமாணங்களை அவதூறுபண்ணியிருக்கிறாய், அவர் நியமித்த ஓய்வுநாளை அவபாவனைபண்ணினாய், அவரை அற்பமாக வெண்ணினாய் நீ அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணினதில்லை அவர் உனக்குக் காட்டின இரக்கத்தை மதியாமலுமனுபவித்துவந்தாய். உன்னுடைய தகாத நினைவுகளும் நன்றிகேடும் பெருமையும் அகிர்த்தியமும் நீ பேசின தகாத வசனங்களும் உனக்கும் அவருக்கும் நடுவே வெளியரங்கமாகும். யாதொரு பாவத்துக்கும் நீ போக்குச்சொல்லமாட்டாய் அப்படியிருக்க உன் செனனமுதல் மரணபரியந்தம் செய்த பாவங்களுக்கென்ன சொல்லுவாய்? உன்னுடைய பாவங்கள் பொறுக்கப்படாதிருந்தால் நீ ஆக்கினைக்குள்ளாகவே தீர்க்கப்படவேண்டும். நீ ஒரு பாவஞ்செய்தவுடனே உன்னை ஆக்கினைக்குள்ளாக்குவது அவருக்கு நீதி அவர் இரக்கமுமுள்ளவராயுமிருப்பதால் இந்நாளளவும் பொறுத்திருக்கிறார். அந்த இரக்கந்தான் உன்னுடைய பாவங்களுக்கு ஒரு பிராயச்சித்தத்தை நியமித்திருக்கின்றது உன்னை நித்திய மரணத்திலிருந்து மீட்கத்தான் தம்முடைய குமாரனை மரணத்துக்கொப்புக்கொடுத்தார். அவருடைய மரணந்தான் உன்னை இந்நாளளவும் உயிரோடே வைத்திருக்கின்றது குமாரன் உனக்காக மரித்ததென்று விசுவாசித்தாயேயாகில் உனக்காறுதல் கிடைக்கும். அப்பொழுது உனக்கு நேரிடடிருந்த ஆக்கினையும் உன்னை விட்டுவிலகும். அவர் உனக்குக் காட்டின மன்னிப்பின் வழியை நீ அநேக முறை தள்ளி அதை அசட்டைபண்ணினாலும இன்னும் அவர் உன்னைக் கைவிடவில்லை அவர் உன்னை அங்கீகரிக்கத் திரும்பத் திரும்ப அழைக்கிறார். குமாரனும் எப்பொழுதும் உனக்காகப் பரிந்துபேசுகிறார். ஆவியானவரும் அநேக முறை எச்சரிததிருக்கிறார். கிறிஸ்தவர்களும் நாளுக்குநாள் உன்னைத் தெருட்டுகிறார்கள். இதுவெல்லாம் அவருடைய இரக்கமல்லவோ! இப்படியிருக்க உன்னிதயம் நாளுக்கு நாட் கடினப்படுகின்றது. நீ உன் வழியைவிட்டுத் திரும்பாமல் நரகமட்டுக்கும் நடக்கிறாய் அவர் உனக்கிரங்குகிறகாலம் சீக்கிரம் போகின்றது. இப்பொழுதே உன் இரட்சிப்பின் நாள், இதுவே நற்பிரிய காலம், இச்சீவியம் முடிந்தவுடன் பழிவாங்குதலினுள்வரும் அந்நாளிலே குமாரனை விசுவாசிக்கிறவன் நித்திய சீவனைக் காண்பான், அவரை விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் பிதாவாகிய தேவன் உலகத்தை நியாயந் தீர்க்கும் அதிகாரத்தைக்குமாரனுக்கொப்புக்கொடுத்தார், அவருடைய நியாயாசனத்துக்கு முன்னே நாம் நிற்கும் பொழுது நாம் அவரில் வைத்த அன்பே நமக்கொதுக்கிடமாயிருக்கும் ஆதலால் நீ உன் அக்கிரமத்தைவிட்டுத் திரும்பி திரியத்துவ தேவனில் அன்புவைக்கவேண்டும், அப்படித் திரும்பாவிடில் நித்த நிற்பந்தமே உன் சுதந்தரம், நீ அப்பொழுது மலைகளே! அவருடைய சன்னிதானத்துக்கென்னை மறைத்துக்கொள்ளுங்களென்று கதறுவாய், அப்பொழுதுதானே தேவனுடைய கோபத்தின் உக்கிரத்தையு அதின் சாப அக்கிரத்தையும் உணர்வாய். பழிவாங்குதலின் மிலாறு உன்னைக் கீழே விழுத்தி அழிவுக்குக்கொண்டுபோகும், அவருடைய தீர்ப்பைத்தடுக்க வேறொருதேவனில்லை, அவருடைய கரம் சருவ இடங்களுக்கும் மகா வல்லபமுள்ளது. இப்படியிருக்க நீ அவருக்குச் சத்துருவாயிருக்க விரும்புகிறாயோ? மித்துருவாயிருக்க விரும்புகிறாயோ? உன்னுடனே சகவாசிகளாயிருந்த விசுவாசிகள் அவருக்குச் சிநேகிதராயும் அருகாசனத்தராயுங் காணப்பட நீ நரகத்திலே விழுந்து புலம்பவேண்டுமே, அவர் மாறாதவராயிருக்கிறாரே அவருடைய தீர்ப்புக்கு மாறுதலில்லையே, அவர் நித்தியமுள்ளவரே, அவருடைய தீர்ப்பும் நித்தியமுள்ளதே நீ இப்படிப்பட்ட தீர்ப்புக்கு அஞ்சமாட்டாயா? நீ நித்திய கோபாக்கினைக்குட் புகுதுகிறாயே, அந்த அக்கினி நித்தியமும் அவியாதிருக்குமே. நீ குமாரனை விசுவாசிக்கிறதற்கு இதுவே சமயம், இதுவே காலம். எங்கள் சீவனென்ன புகையல்லவா! எங்கள் சரீரம் காலமே அலர்ந்து அந்திபடமுன் வாடும் பூவல்லவா? எங்கள் ஆயுசின் காலம் போகப் போகப் பழிவாங்குதலினுள் அணுகி அணுகி வருகின்றதே, ஆதலால் இப்பொழுதே மனந்திரும்பு, இப்பொழுதே குணப்படு, இப்பொழுதே அவரைச் சந்திக்கப்பிரயெத்தனப்படு

௩ம் அதிகாரம்
நீத்தார்பெருமை—*The Praise of Holy Men*

௨௯ குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது.

பு துறவு, மெய்யுணர்வு, நிராசை முதலாகிய நற்குணங்களென்று சொல்லப்பட்ட மலையின் முடிவில் நின்ற முனிவருடைய கோபமானது தான் உள்ள அளவு கணப்பொழுதாயிருந்தாலுங் கோபிக்கப்பட்டவராலே தடுப்பது அரிது.

The anger of those who have ascended the mountain of goodness, though it continue but for a moment, cannot be resisted *Drew*

௩௰. அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்,
செந்தண்மைபூண்டொழுகலான்.

பு. எல்லா உயிர்களிடத்தும் செப்பமாகிய கருணையை வைத்து நடப்பதினாலே அந்தணரென்று சொல்லப்படுபவர் அறவறத்திலே நிலைபெற்ற முனிவராம்

The virtuous are truly called Andanar, because in their conduct towards all creatures they are clothed with kindness. *Drew.*

No. XI

Messrs Editors,

Those of your Readers who have not given the subject their special attention will, I dout not, be surprised to learn that there are more than 80 *verbs* in the English language definitive of the operations of the human mind This circumstance illustrates the richness of the language and the power of composition possessed by one who has its multitude of Synonymes at full command —I send a list of the verbs alluded to with the most exact and critical definitions I could obtain I do not annex a list of *sentences* lest these might call for more room in your paper than you could reasonably allow. Will you kindly give your Readers the *Tamil* of each of these words? *W*

Through the medium of the *Mind* mankind

Think—To have the mind occupied on some subject.
Suppose—To receive a thing into the mind as true
Imagine—To form a notion or idea in the mind.
Believe—To have a firm persuasion of any thing
Deem—To conclude on consideration
Reflect—To turn back the mind upon its past operations or upon past events
Ponder—To view with deliberation
Meditate—To let the thoughts dwell on a subject
Muse—To be closely occupied in contemplation
Consider—To view a subject attentively
Regard—To notice favorably or with acceptance
Fancy—To believe or suppose without proof
Contemplate—To think upon studiously or consider with attention
Conceive—To form in the mind
Comprehend—To seize or contain in the mind
Understand—To receive or have the ideas expressed or intended to be conveyed by a speaker or writer
Apprehend—To understand without passing a judgement or drawing an inference
Conjecture—To throw together possible or probable events
Guess—To form an opinion without certain principles or means of knowledge
Divine—To think and know as independently as God
Surmise—To entertain thoughts on slight evidence that something does or will exist
Cogitate—To direct the thoughts to an object.
Entertain—To keep hold or maintain in the mind with favor
Will—To decide in the mind that something shall be done or foreborne
Wish—To have a desire either for what is or what is not supposed to be obtainable.
Choose—To take a thing among others
Prefer—To regard one more than another

ஆனி மாசம்.

சாதியூ ஆனி யநந் தி முதல் ஆடி யநதி வரைக்கும

E date	தமிழ்த் தேதி	வாரம்	நட்சத்திரம்		திதி.		யோகம்		கரணம	
13	க	தி	ஆ	உக	ப	நசlll	வி	l	ப	கlll
							அ	ருஉl	பா	உஎl
14	உ	செ	ம	உரு	ஷ	உருll	வ	சருl	தை	உருll
15	ந	பு	பு	உஉ	ஸெ	யகll	சி	நஎlll	வ	யகlll
16	ச	வி	உ	யஅ	அ	யகlll	வி	நயll	ப	யகlll
17	ரு	வெ	அ	யநlll	ந	அl	வ	உநll	சகு	அl
18	சா	ச	தி	யlll	த	நll	ப	யஎl	க	நll
					வ	ருருlll			வ	உஎlll
19	எ	ஞா	க	அll	து	ருகா	சி	யசll	ப	உஎlll
20	அ	தி	வி	எlll	தி	ருச	சி	சூll	கவு	உரு
21	கூ	செ	அ	எl	ச	ருந	சா	உl	கர	உ[illegible]
							சு	ருகூlll		
22	ய	பு	கே	அll	0	ருநll	சு	ருஎll	வி	உநl
23	யக	வி	மூ	யகll	பி	ருரு	பி	ருகூll	பா	உசl
24	யஉ	வெ	பூ	யருl	து	ருஅ	மா	ருகூl	தை	உகூll
25	யந	ச	உ	உய	தி	கூய	வை	ருஎ	வ	உகூlll
26	யச	ஞா	தி	உருlll	தி	சlll	வி	ருஅl	வி	சlll
27	யரு	தி	அ	நசlll	ச	கூl	பி	ருகlll	பா	கூl
28	யசா	செ	ச	நஅl	ப	யகl	ஆ	கூய	தை	யகl
29	யஎ	பு	பூ	சசll	ஷ	யகூ	ஆ	சl	வ	யகூ
30	யஅ	வி	உ	ருயl	ஸ	உயll	சவு	உll	ப	உயll
July.										
1	யகூ	வெ	ரே	ஞரு	அ	உச	சோ	நll	கவு	உச
2	உய	ச	அ	ருஅ	ந	உகூlll	அ	நll	க	உகூlll
3	உக	ஞா	பர	கூய	த	உஅ	சு	உlll	வி	உஅl
4	உஉ	தி	பர	சll	ஏ	உஅl	தி	க	பா	உஅ
							ரு	ருஎ		
5	உந	செ	கா	உlll	து	உஎl	க	ருசl	தை	உஎl
6	உச	பு	ரோ	உlll	தி	உசlll	வி	சகll	வ	உசlll
7	உரு	வி	மி	சlll	ச	உசll	து	சச	சகு	உசll
			தி	ருஅ						
8	உசா	வெ	பு	ருஎ	*	யஎll	வி	நஎlll	நா	யஎll
9	உஎ	ச	பூ	ருநll	பி ●	யஉll	அ	நக	ப	யஉll
10	உஅ	ஞா	ஆ	சகlll	து	கூlll	வ	உநlll	கவு	கூlll
11	உகூ	தி	ம	சருll	தி	க	சி	யகூll	[illegible]	[illegible]
					ச	ருநlll			வ	உகூlll
12	நய	செ	பூ	சகll	ப	சஅlll	வி	அlll	ப	உகlll
13	நக	பு	உ	நஎll	ஷி	சந	வ	க	கவு	யகl
							ப	ருஉll		

வியாழக்கிழமைச் சங்கிராந்தி நாழி உக, விநாடி ருக, கற்கடகராசி